## கலை இலக்கிய விமர்சகர் இந்திரன் ---
## 8ஆம் வகுப்புத் தோழர் தியாகுவின் இன்றைய மதிப்பீடு.

---------------------------------------------------------------------------

ஆகஸ்ட் தடம் இதழில் என்னுடைய நண்பர் பி ஜி இராஜேந்திரன் (இன்று இந்திரன் ),அவர்களின் பிரம்மையின் மாளிகையில் நானும் கண்டிராத ஆத்மாவின் அந்தரங்க ரகசிய பூச்சுக்களைகாட்டியுள்ளார்.நாங்கள் ஒரே பள்ளியில் படிக்கையில் தன்னுடைய எழுத்தாற்றலை அவ்வளவாக அவர் வெளிக்காட்டியதில்லை.அவர் என்னைப் போன்ற , படிப்பதில் ஆர்வம்கொண்ட சி சுப்ரமணியன் ,பி கே சீனிவாசன்,பாலகிருஷ்ணன் போன்ற வட்டாரக்குழு நண்பர்களோடு தன்னுடைய கோடம்பாக்க இல்லத்தில் இருந்த மேல்மாடிக்கொட்டகையில் நடத்திய ELITE LITERARY CLUB என்ற (அறிவு ஆற்றல் படைத்தவர்கள் என்ற இறுமாப்புக்கொண்டவர்களின் )சிறு சங்கத்தில் நிகழ்ந்த கட்டுரை வாசிப்புகளே என்னுடைய நினைவில் இருக்கின்றன.

தன்னுடைய தந்தையார் மற்றும் மாமாக்கள் இவர்களின் தாக்கம் ஒரு சிறிதளவே என நான்நினைத்திருந்தேன்.ஆனால் அவர்களும் மற்ற உறவினரும் தந்தையின் கலையார்வம் மிக்க நண்பர்களும் எத்துணை ஆழமாக இவரை ஈர்த்துள்ளார்கள் என்பதை இந்திரன் காட்டியுள்ளார் இந்தக்கட்டுரை மூலம். பணத்திற்காக இவர் எழுத்துலகை நாடவில்லை.வங்கியில் பணிபுரிந்தது கூட தன்கலை ஆர்வத்தை பலரைப் பார்த்து கருத்துக்களை பரிமாறிக் கொள்ளவும் பின்னர் இளம் எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் பணியில் இறங்கவும்

தான். மறைந்த திரைக்கவிஞர் முத்துக்குமாரின் வளர்ச்சி க்கும் இவர் ஓர் காரணம் ஆவார்.

இவர் ஒரு சிந்தனை ஊற்று.ஆனால் அந்த ஊற்றுக்கு அடியில் பெரிய உணர்ச்சிக் குழம்பு பிரபஞ்சமே இருக்கிறது .காலமும் விண்வெளியும் பின்னிப் பிணைந்து மடிப்புக்களாக இருப்பது இவருக்கு தெரிந்திருந்தாலும் தன் சிந்தனை சிற்பங்களால் நுண்ணிய வேலைப்பாடுகளால் தன்னுடைய கால்சுவடுகளைக் காலம் என்ற கடற்கரை மணல்பரப்பில் பதிக்கப்பார்க்க முயலும் ஆசையைப்பற்றி என்னிடத்தில் பேசியிருக்கிறார்.

இவருடைய பிரம்மைகளின் மாளிகை காலத்தின் எதிர்த்திசையில் சென்று தன் பரிணாம வளர்ச்சியில் தோன்றிய புதிய பரிமாணங்களை சுய தோண்டல் செய்யும் முயற்சியே.இந்திரன் அவர்களின் கடந்த காலநிகழ்வுகள் அவர்களின் நிகழ்கால வர்ணனைகளால் காலத்தின் மண்ணில் புதைந்து கிடந்த விதைகள் விந்து சக்தி பெற்று உயிர்ப்பு புஷ்டி பெற்ற மரங்களாய் வளர்ச்சி பெறும் என நினைக்கிறேன் . விகடன் தடம் அம்முயற்சிக்கான ஊக்குவிப்பான்! --- சே . தியாகராஜன், சென்னை